**செய்தி வெளியீடு எண்: 349** **நாள்: 17.06.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

உலக இசைதினம் ஜீன்–21 ஆம் தேதி கொண்டாடப்படுவதால், தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாக கொண்டாடும் வகையிலும், சென்னை மாவட்ட அளவிலான உலக இசை தினவிழா இசைப் போட்டிகள் **19.06.2019** அன்று காலை **10.00** மணி அளவில் சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உலக இசை தினவிழா போட்டிகள் 15 வயது முதல் 30 வயதிற்குட்பட்டவர்களிடையே 1. தமிழிசை போட்டி, 2. கிராமிய பாடல் போட்டி, 3. முதன்மை கருவியிசைப் போட்டி ( நாதஸ்வரம், வீணை, வயலின், புல்லாங்குழல், மாண்டலின், கோட்டுவாத்தியம், சாக்ஸபோன், கிளாரிநெட் போன்றவை) 4. தாள கருவியிசை போட்டி (மிருதங்கம், தவில், கடம், கஞ்சிரா, மோர்சிங் போன்றவை) என நான்கு வகை பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் தமிழில் அமைந்த பாடல்கள் மட்டுமே பாடவோ / இசைக்கவோ வேண்டும். போட்டியாளர்கள் தங்களுக்கு தேவையான இசைக் கருவிகளை அவரவர் கொண்டு வருதல் வேண்டும். போட்டியில் வெற்றி பெறுவர்களுக்கு முதல் பரிசாக **ரூ.3,000/–,** இரண்டாம் பரிசாக **ரூ.2,000/–,** மூன்றாம் பரிசு **ரூ.1000/–** என நான்கு வகையிலான போட்டிகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும். மேலும் பங்குபெறும் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் இசைப்போட்டிகள் குறித்த விவரங்களை, சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் தொலைபேசியில் அறிந்து கொள்ளலாம். தொலைபேசி எண். **044-24937217**.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**